# முதலைகுளத்தில் அருந்ததியர் தாய்-மகன் பெட்ரோல் ஊற்றி எரிப்பு

## நேரடி விசாரணை அறிக்கை

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா விக்ரமங்கலம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட கஸ்பா முதலைக்குளம் ஊராட்சி இங்கு இந்திராகாலனியில் வாழ்ந்து வந்த அருந்ததியர் பெண் பாண்டியம்மாள் இவரது மகன் சுகபிரபு இவர்கள் மீது சில ஆதிக்க சாதிகள் பெட்ரோல் ஊற்றி எரித்து படுகொலை செய்துள்ளனர். இதில் சம்பவ இடத்திலே பாண்டியம்மாள் உடல் கருகி இறந்து விட்டார். மகன் சுகப்பிரபு தீக்காயத்துடன் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்செய்தியை கேள்விபட்ட ஆதித்தமிழர் பேரவை தோழர்கள் நேரடி விசாரணை செய்தனர்.

**<u>கள ஆய்வு</u>**

1. ***விடுதலை வீரன்***
   அமைப்புச்செயலாளர்
2. ***செல்வம்***
   மாவட்ட செயலாளர்
3. ***கார்த்திக்***
   மாவட்ட தலைவர்
4. ***ஆதவன்***
   மாநகர செயலாளர்

ஆகியோர் 1.3.2012 அன்று மருத்துவமனையில் இருக்கும் சுகப்பிரபுவை சந்தித்து நடந்ததை பற்றி விசாரித்தனர். சம்பவம் நடந்த 28.2.12 அன்று சுகப்பிரபுவும் இவரது அம்மா பாண்டியம்மாள் இருவரும் கருமாத்தூர் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்கு சென்று வந்துள்ளனர். இரவு சாப்பிட்டுவிட்டு தூங்க சென்றுள்ளனர். இதில் சுகப்பிரபு டி.வி. பார்த்துக்கொண்டே தூங்கிவிட்டார். இரவு சுமார் 2 மணி அளவில் இவரது அம்மா பாண்டியம்மாள் தீக்காயத்துடன் மகனை கத்தி எழுப்பியுள்ளார். பதறி எழுந்த சுகப்பிரபு அம்மாவை காப்பாற்ற முயற்சி செய்துள்ளார். ஆனால் தீ கொழுந்து விட்டு எரியவும் இவரால் காப்பாற்ற முடியவில்லை. பின்னர் தப்பித்துக்கொள்ள கதவை திறந்துபோது கதவு திறக்கவில்லை. கதவின் முன்புறத்தில் கதவை சேலையில் கட்டி எதிரில் உள்ள ஓட்டு விட்டதில் இறுக்கி கட்டியுள்ளனர். கதவை திறக்க போராடி இழுத்துள்ளார் சுகப்பிரபு பின் கதவு லேசாக திறக்கவும் அதன் வழியாக வெளியில் வந்துள்ளார்.

வெளியில் வந்து காப்பற்றுங்கள் என்று கத்தியவுடன் அருகில் இருந்தவர்கள் சுகப்பிரபுவை காப்பாற்றியுள்ளனர். அந்த நேரத்தில் தெருவில் உள்ள தெருவிளக்குகள் அணைக்கப்பட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. பின் வீட்டில் எரிந்துகொண்டிருந்த பாண்டியம்மாளை காப்பாற்ற முயற்சி செய்துள்னர். ஆனால் தீ அதிகமாக எரியும் புகையினால் யாருமே கிட்ட நெருங்க முடியவில்லை. பின் சிறிது நேரத்தில் உடல் கருகி இறந்துள்ளார். தீக்காயம்பட்ட சுகப்பிரபுவை அவசர ஊர்தி வரவலைக்கப்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். பின்னர் அவர் கூறுகையில்

அவரது வீட்டின் அருகில் வசித்து வரும் கள்ளர் சமூகத்தை சேர்ந்த குபேந்திரன் என்பவருக்கு சொந்தமான ஆட்டோவை சுகப்பிரபு தம்பி அலெக்ஸ்பாண்டி என்பவர் டிரைவராக வேலை செய்து வந்துள்ளார் இதில் குபேந்திரன், அலெக்ஸ்பாண்டிக்கு சரிவர சம்பளம் கொடுக்காததால் ஆட்டோ ஓட்டுவதை நிறுத்தியுள்ளார். இதில் அன்றிலிருந்து குபேந்திரன் என்பவர் முன்பகையாக இருந்து வருவதாகவும், குபேந்திரனின் அவரது மனைவியை சுகப்பிரபுவுடன் தொடர்புபடுத்தி சந்தேகத்துடன் பேசிவந்துள்ளார். இதன்காரணமாகத்தான் குபேந்திரன் என்பவர் மேற்கண்ட சதி செயலை செய்து இருப்பார்? என்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சுகப்பிரபு தெரிவித்தார்.

சுகப்பிரபுவுடன் மருத்துவமனையில் இருக்கும் அவரது அத்தை கூறும்போது, சில மாதங்களுக்கு முன் சுகப்பிரபு சித்தி மகன் பாண்டி என்பவர் உசிலம்பட்டி அருகில் இருக்கும் கொப்பிலிப்பட்டியில் உள்ள தேவர் சமூகத்தை சேர்ந்த பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு அப்போது நாகர்கோவிலில் கம்பெனியில் வேலை பார்த்து வந்த சுகப்பிரபுவிடம் அழைத்து சென்றுள்ளனர். அவர் அந்த பெண்ணின் நகையை அடகு வைத்து ரூ.50 ஆயிரம் பணத்தை எடுத்துக்கொண்டு மீதம் 50 ஆயிரம் பணத்தை சுகப்பிரபு தனியாக தொழில் செய்வதற்கு கம்பெனியின் முதலாளியிடம் கொடுத்துள்ளார். பின்னர் பாண்டி அந்த பெண் இருக்கும் இடம் தெரிந்து ஆண்டிப்பட்டி காவல்துறையினர் சென்று அழைத்து வந்துள்ளனர்.

பின்னர் ஆண்டிப்பட்டி காவல்நிலையத்தில் வைத்து பாண்டி அந்த பெண் இருவரையும் பிரித்து வைத்துள்ளனர். இதில் அவர் அணிந்திருந்த நகையை திருப்பி கேட்டுள்ளார். அதில் பாண்டி தரப்பில் ரூபாய் 50 ஆயிரம் கொடுக்கப்பட்டுள்ளது. சுகப்பிரபுவின் அம்மா ஊரில் கடன் வாங்கி ரூபாய் 35 ஆயிரம் கொடுத்துள்ளார். இச்சம்பவம் 15 நாட்களுக்கு முன்பு நடந்துள்ளது.

பின் ஆதித்தமிழர் பேரவை சார்பில் கஸ்பாமுதலை குளத்துக்கு 1-ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு சென்றோம் ஊரில் உள்ள அருந்ததியர் மக்களை நேரில் சந்தித்து விபரம் கேட்டோம் யாருக்குமே நடந்தது தெரியாது. என்று கூறி விட்டனர். இதில் வேலுச்சாமி என்பவர் பாண்டியம்மாள் உடல் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்யும்போது உடலில் காயம் இருந்ததாக டாக்டர்கள் சொன்னதாக கூறினர். அருகில் இருந்த பாண்டியம்மாளின் (மாமியார்) வயதான பாட்டியிடம் பேசினோம். எனது கணவர் இறந்து ஒருவாரத்தில் எனது மகன் இறந்துவிட்டான். இப்போது மருமகளும் இறந்து விட்டாள். என்று கண் கலங்கினார். ஊரில் இருந்து 1 கி.மீ தொலைவில் உள்ள இந்திரா காலனியில் 20 அருந்ததியர் குடும்பங்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் காலனிவீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு 4 வீடுகளில் மட்டும் அருந்ததியர் வாழ்கிறார்கள். மீதியுள்ள 15 வீடுகளில் கள்ளர்

சமூகத்தினர் ஒத்தி என்கிற பெயரில் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து வீட்டை எழுதி வாங்கி குடியிருந்து வருகிறார்கள். ஒரு வீட்டில் மட்டும் பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் தற்காலிகமாக குடியிருப்பதாக கூறினார்.

பின் சுகப்பிரபு வீட்டை சுற்றி பார்த்தோம் வீட்டை பூட்டி சாவியை காவல்துறை வைத்துள்ளனர். வீட்டின் பின்புறம் இரண்டு ஜன்னல் இருக்கிறது. அதில் எரிந்து புகை பிடித்து அருகில் இருந்த மரம் கருகியிருந்தது. அருகில் இருந்த காவல் பணியாளர் நம்மிடம் இந்த சம்பவம் மர்மமாக இருக்கிறது. ஜன்னல் வழியாக பெட்ரோல் ஊற்றமுடியாது. தீ எரிந்து சாகும்வரையில் எப்படி ஒருவர் கத்தாமல் இருக்க முடியும். ஆகவே இதை சந்தேக மரணம் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம். இதற்கு தனிப்டை அமைத்து விசாரணை செய்து வருகிறோம் என்றார்.

அருகில் இருந்த செல்வம் என்ற பெண்ணிடம் விசாரித்தோம் இரவில் நாங்கல் நல்ல தூங்கி கொண்டிருந்தோம் எங்களுக்கு சத்தம் எதுவும் கேட்கவில்லை. சுகப்பிரபு வெளியில் வந்து சத்தம் போடவும் அதன் பின்னர்தான் எங்களுக்கு தெரியும். எப்படி நடந்தது, என்ன காரணம்? என்று தெரியவில்லை? ஆனால் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு பாண்டியம்மாள் கோழை அல்ல. அவர்தான் மகளிர் குழு தலைவி. யாரிடமும் சரியாக பேசமாட்டார். மிகவும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வார். சமீபத்தில் மகன் சுகப்பிரபு கடனை அடைப்பதற்கு எங்களிடம் நகை கடன் வாங்கி கட்டினார். அவருக்கு கடனை பற்றியெல்லாம் கவலை இல்லை. எதையும் சமாளிக்க கூடியவர் அவரது மகன்கள் நல்ல பசங்க. எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவர்கள். இதில் சரவணன் சென்னையில் வேலை பார்க்கிறான். அலெக்ஸ் பாண்டி வேலை விசயமாக ஊரை விட்டு போனவன் எங்கு இருக்கிறான் என்று தெரியவில்லை. சுகப்பிரபு மட்டும் இப்போது இங்கு இருந்தான். சம்பவம் நடந்த அன்று 11 மணிக்கு தாயும், மகனும் சாப்பிட்டு விட்டு எங்களிடம் பேசிவிட்டு பிறகுதான் சென்றனர்.

போலீஸ் மோப்பநாய் வந்து வீட்டை சுற்றி வந்தது. அருகில் இருக்கும் கிணற்றில் சென்று மோப்பம் பிடித்த போது அங்கு மது குடித்த பாட்டில் கிடந்ததை அடையாளம் காட்டியுள்ளது. அன்று இரவு மின்தடை செய்யப்பட்டிருந்தது. சிவசாமி என்பவர் வீட்டின் அருகில்தான் தெரு மின் விளக்கின் (கண்ட்ரோல்பாக்ஸ்) உள்ளது. அதில் இருந்த பீஸ் போடுகிற வயர் பிடுங்கப்பட்டு இருந்தது. மறுநாள் போலீஸ் வந்துதான் மீண்டும் பீஸ் போட்டனர் என்றார்.

## எமது பரிந்துரைகள்

1. இந்திரா காலனியில் அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்பில் சாதி, இந்துக்கள் கள்ளர்கள் சிறிது தொகை பணத்தை கொடுத்து விட்டு சட்டத்திற்கு புறம்பாக குடியிருப்பவர்களை அகற்றிவிட்டு மீண்டும் அந்த வீடுகளை உரியவரிடம் ஒப்படைக்கவேண்டும்.
2. இந்த சம்பவத்தில் சாதி இந்துக்களை காப்பாற்றும் என்னத்துடன் காவல்துறையினர் நடந்து கொள்வதாக அறிகிறோம். ஆகவே உரிய விசாரணை செய்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. அப்பகுதி மக்கள் நடந்தவற்றை சொல்வதற்கு பயந்து, பயந்த சூழலில் இருக்கிறார்கள் அவர்கள் பயத்தை போக்கி சுதந்திரமாக நடந்தவற்றை சொல்வதற்கு அவர்கள் அச்சத்தை போக்கி உண்மை நிலைய கண்டு அறிய சரியான பாதுகாப்புகொடுத்து அவர்களை கருத்து சொல்ல முன்வர அரசு முயற்சி எடுக்க வேண்டும்.
4. உன்மை நிலையை விசாரணை செய்யாமல் நாளிதழில் தவறான தகவல் தந்துள்ளனர் காவல்துறை. வழக்கை திசை திருப்பாமல் இருக்க மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் நேரடி பார்வையில் இந்த விசாரணை நடத்தப்படவேண்டும்.
5. இந்திரா காலனி குடியிருப்பு முழுவதும் பழுது அடைந்துள்ள வீடுகளை மீண்டும் பராமரிப்பு செய்து கொடுக்க வேண்டும்.
6. சம்பந்தப்பட்ட குற்றவாளி மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்கு பதிவு செய்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதியும், நிவாரணமும் வழங்கப்பட வேண்டும்.
7. தீக்காயம் ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்பட்ட சுகப்பிரபுவுக்கு நல்லமுறையில் மருத்துவம் பார்க்க தனியார் உயர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படவேண்டும்.
8. குடும்பத்தை பிரிந்து வாடும் அலெக்ஸ்பாண்டியை கண்டுபிடித்து உரிய நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
9. தாய்-தந்தையை இழந்து நிற்கும் சுகப்பிரபு, சரவணன் , அலெக்ஸ் பாண்டி ஆகியோருக்கு அரசு வேலை வழங்கப்பட வேண்டும்.
10. தொடரும் அருந்ததியர் மீதான தீண்டாமை, படுகொலையை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்க வேண்டும்.
11. இது அருந்ததியர் சமூகத்திற்கு மட்டும் ஏற்பட்ட பிரச்சனை என்று பாறாமல் இந்த மனித உரிமை மீறலை அனைத்து ஜனநாயக அமைப்புகளும் கண்டிக்க முன்வரவேண்டும்.




# ஆதித்தமிழர் பேரவை


(மதுரை மாவட்டம்)

டாக்டர் கபீர்நகர், ஆண்டார்கொட்டாரம் அஞ்சல், மதுரை-20.


அனுப்புநர்: **கார்த்திக்**
மாவட்ட தலைவர்

அலைபேசி: 94431 58892

பெறுநர்: **மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்**
மதுரை மாவட்டம்.

ஐயா, வணக்கம்

மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட கஸ்ப முதலைகுளம் இந்திரா காலனியில் அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த பெண் பாண்டியம்மாள் இவரது மகன் சுகப்பிரபு இருவரும் கடந்த 28.2.12 அன்று இரவு 2 மணியளவில் சில ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளனர். இதில் பாண்டியம்மாள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி இறந்துள்ளார். உயிருக்கு கவலைக்கிடமாக மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் சுகப்பிரபு.

சிகிச்சை பெற்று வரும் சுகப்பிரபுவிடம் எங்கள் அமைப்பின் சார்பில் விசாரித்தபோது அவரது வீட்டின் அருகில் வசித்து வரும் கள்ளர் சமூகத்தை சேர்ந்த குபேந்திரன் என்பவருக்கு சொந்தமான ஆட்டோவை சுகப்பிரபு தம்பி அலெக்ஸ்பாண்டி என்பவர் டிரைவராக வேலை செய்து வந்துள்ளார் இதில் குபேந்திரன், அலெக்ஸ்பாண்டிக்கு சரிவர சம்பளம் கொடுக்காததால் ஆட்டோ ஓட்டுவதை நிறுத்தியுள்ளார். இதில் அன்றிலிருந்து குபேந்திரன் என்பவர் முன்பகையாக இருந்து வருவதாகவும், குபேந்திரனின் அவரது மனைவியை சுகப்பிரபுவுடன் தொடர்புபடுத்தி சந்தேகத்துடன் பேசிவந்துள்ளார். இதன்காரணமாகத்தான் குபேந்திரன் என்பவர் மேற்கண்ட சதி செயலை செய்து இருப்பார்? என்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சுகப்பிரபு தெரிவித்தார்.

அதன் சமயம் சம்பவம் நடந்த (இரவு 2 மணியளவில்) தெருவிளக்கு அணைக்கப்பட்டு மின்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின் கம்பத்தில் இருக்கும் விளக்கு போடப்படும் (பீஸ்கேரியல்) பிடுங்கப்பட்டுள்ளது. மறுநாள் காவல்துறை விசாரணை செய்தபோது மோப்பநாய் வரவழைக் கப்பட்டுள்ளது. அது சம்பவம் நடந்த வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றில் மது அருந்திய பாட்டில் கிடந்ததை அடையாளம் காட்டியுள்ளது.





# ஆதித்தமிழர் பேரவை

(மதுரை மாவட்டம்)
டாக்டர் கபீர்நகர், ஆண்டார்கொட்டாரம் அஞ்சல், மதுரை-20.



இதன் அடிப்படையில் பார்க்கும்போது வெளியில் இருந்துதான் சில சமூக விரோதிகள் இந்த செயலை செய்திருக்க முடியும் என்று தெரியவருகிறது. மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் கட்டி கொடுக்கப்பட்டுள்ள காலனி வீடுகளில் சாதி இந்துக்கள் குடியிருப்பது சட்டப்படி குற்றம். அப்படி இருந்தும் குடியிருந்து வரும் கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்களை அகற்றி விட்டு மீண்டும் அந்த காலனி வீடுகளை உரிய அருந்ததியர் மக்களிடமே வீட்டை ஒப்படைக்க வேண்டும்.

தீக்காயம் அடைந்து சிகிச்சை பெற்றுவரும் சுகப்பிரபுவிற்கு தனியார் மருத்துவமனையில் தீவிரசிகிச்சை அளிக்கப்படவேண்டும். தாய், தந்தையை இழந்து வாடும் சுகப்பிரபு, அவரது தம்பி சரவணன் ஆகியோருக்கு அரசுப்பணி வழங்கி சமூகத்தில் அவர்களை வாழ வைக்க வேண்டும். வீட்டை விட்டு காணாமல் போன சுகப்பிரபுவின் மற்றொரு தம்பி அலெக்ஸ்பாண்டியனை கண்டுபிடித்து ஒப்படைக்கவேண்டும். சம்பந்தப்பட்ட உண்மை குற்றவாளிகள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு பாதுகாப்பும், நீதியும், நிவாரணமும் கிடைத்திட ஆவண செய்திட வேண்டுகிறோம்.

நாள் :

இடம் :

இப்படிக்கு

**(கார்த்திக்)**
மாவட்டத்தலைவர்